**அ.வ.எண்.201/2023**
**வா.சா.1 : சங்கீதா**
**தேதி : 28.10.2025**
**சாட்சி முன்னிலையாகி, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,**
**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் கூடுதல் குறுக்கு விசாரணை:-**

அய்யனார்கவுண்டரின் வாரிசு சான்றிதழ் வா.சா.ஆ.22 மற்றும் வா.சா.ஆ.23 ஆகிய ஆவணங்களில் இணைக்கப்பட்டுள்ளது. அந்த வாரிசு சான்றிதழை யார் வாங்கினார்கள் என்றால் ஆசைத்தம்பி இணையதளம் மூலமாக வாங்கினார். அன்புசெல்வி என்பவர் என் மாமியாரின் தங்கை மகள் ஆவார். அன்புசெல்வி எங்களுடன் நல்ல உறவுமுறையில் தான் உள்ளார். வா.சா.ஆ.22 மற்றும் 23 ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து மாரியம்மாளும் அவர்கள் வாரிசுகளும் சேர்ந்து தான் சொத்தினை விற்றுள்ளார்கள். மாரியம்மாள் அவரின் பங்கையும் விற்றுள்ளார் என்றால் அவருடைய பங்கையும் சேர்த்து விற்றுள்ளார். உங்கள் கூடுதல் பிரமாண வாக்குமூலத்தில் நீங்கள் "மாரியம்மாள் 21.01.2019 ஆம் தேதியில் யார் மூலமாக தெரிந்துகொண்டீர்கள் என்று மாரியம்மாளிடம் வாதி குறுக்கு விசாரணை செய்த போது அவர் அக்கா மூலமாக தெரியும் என்பதற்கு பதிலாக வாய்தவறுதலாக அப்பா மூலம் தெரியவந்தது" என்று தவறுதலாக கூறியுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் மாரியம்மாளுக்கு எதிராக சொல்லியுள்ள குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் தவறானவை என்று சொன்னால் சரியல்ல.

**ஓம்/.K.H.இளவழகன்.,**
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.